# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.339/பேரூ/2023
நாள். 07.01.2024

திரு. K.முத்தமிழ்ச்செல்வன்,
வல்லம், தஞ்சாவூர் – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வல்லம் பேரூராட்சி – எதிர்மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம், படையாச்சித்தெரு, கதவு எண்.2/35 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு. K.முத்தமிழ்ச்செல்வன் என்பவரின் 16.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2023 அன்று பெறப்பட்டு, 339/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம், படையாச்சித்தெரு, கதவு எண்.2/35 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K.முத்தமிழ்ச்செல்வன் என்பவரின் 16.10.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் தஞ்சாவூர் வட்டம், திருக்கானூரப்பட்டி என்ற கிராமத்தில் உள்ள சர்வே எண். 49/1A விஸ்தீர்ணம் 0.26.0 ஏர்ஸ் என்ற புஞ்சை நிலம், வருவாய்துறையின் நிரந்தர ஆவணங்களில் அருள்மிகு பஞ்சரேஸ்வரர் ஆலயம் என்று பதிவாகியுள்ளது. இந்த நிலத்தில் கட்டப்பட்டுள்ள கடைகள், வீடுகளுக்கு தனி நபர் பெயரில் வல்லம் பேரூராட்சியால் வரிவிதிப்பு செய்யப்பட்டு வந்தது.

எனவே, தனி நபர் பெயரில் சொத்துவரி விதிப்பதனை ரத்து செய்து, நிலத்தின் உரிமையாளர் பெயரில் சொத்துவரி விதிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டு, தஞ்சாவூர், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அவர்களுக்கு மனு அளித்திருந்தேன். இது தொடர்பாக வல்லம் பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ள தஞ்சாவூர் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையரது கடிதத்தில்,திருக்கோவிலுக்கு சொந்தமான புல எண்.49/1A–ல், குத்தகை மற்றும் வாடகைதாரர்களுக்கு விதிக்கப்படும் சொத்துவரி, குடிநீர் வரி மற்றும் பிற வரிகளுக்கு அளிக்கப்படும் ரசீதுகள் ஆகியவற்றை தனி நபர்கள் பெயரில் விதிக்காமல் இனிவரும் காலங்களில் திருக்கோவில் பெயரிலேயே வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இந்த கடிதத்திற்கு வல்லம் பேரூராட்சியின் செயல் அலுவலர் உரிய நடவடிக்கை எதனையும் எடுக்காத காரணத்தால், இப்பொருள் தொடர்பாக, வல்லம் பேரூராட்சியின் பொது தகவல் அலுவலருக்கு அளித்த விண்ணப்பத்திற்கு, புல எண். 49/1A –ல், தரை வாடகை மற்றும் குத்தகை வழங்கி உள்ள நபர்கள் பட்டியல் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும், தஞ்சாவூர் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் பட்டியலை தெரிவிக்கும்பட்சத்தில் தனி நபர்கள் பெயரில் விதிக்கப்பட்ட வரியினங்களை திருக்கோவில் பெயரில் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தகவல் அளிக்கப்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து, தஞ்சாவூர் இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்றிருந்த தரை வாடகை மற்றும் குத்தகை செலுத்துபவர்களது முழுமையான பட்டியலை வல்லம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பியிருந்தேன். இதன் பின்னரும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால், பின்வரும் காரணங்களுக்கு எனது புகாரினை முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

**கோரிக்கை 1**

திருக்கோவில்களுக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு இந்து சமய அறநிலையத்துறையிடம் முறைப்படி அனுமதி பெற்றிருக்க வேண்டும் எனவும், அனுமதி பெற்று கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு நிலத்தின் உரிமையாளர் பெயரில் சொத்து வரி விதிக்க வேண்டுமே தவிர தனி பெயரில் சொத்து வரி விதிப்பதற்கு விதிகளில் வகைமுறை இல்லை என்ற விவரங்களையும் எனது புகாரில் விரிவாக தெரிவித்து இருந்தும், இதுகுறித்து சட்டப்படியான நடவடிக்கை எதையும் வல்லம் பேரூராட்சியின் செயல் அலுவலர் மேற்கொள்ளவில்லை. இத்துடன் தனிநபர் பெயரில் வரி விதிப்பு செய்யப்படுவதற்கு குறித்து ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இதன்மூலம், திருக்கோவிலுக்கு சொந்தமான நிலங்கள் தனி நபர் மூலம் அபகரிப்பு செய்யப்படுவதற்கு பேரூராட்சியின் செயல் அலுவலரே துணைபுரிந்து உள்ளதனை எடுத்துக்காட்டுகிறது. இத்துடன் திருக்கோவிலுக்கு சொந்தமான புல எண். 49/1A–ல் தரை வாடகை, குத்தகை ஆகியனவற்றை செலுத்தும் நபர்களின் பட்டியலை அனுப்பிய பிறகும், தனி நபர்களது பெயரில் விதிக்கப்பட்ட சொத்து வரி, குடிநீர் வரி ஆகியனவற்றை திருக்கோவில் பெயரில் விதிப்பதற்கு நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. இதன் மூலம், தனது சட்டப்படியான

அரசாங்க கடமை மற்றும் பொறுப்பு ஆகியவற்றை செயல் அலுவலர் வேண்டுமென்றே ஆற்ற மறுத்துள்ளார். இதற்காக, வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர் மீது Tamilnadu Civil Services (Discipline & Appeal Rule, 17(b)ன் கீழ் தகுந்த ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, இதற்கான விபரத்தை செயல் அலுவலரின் பணி பதிவேட்டில் பதிவு செய்வதற்குஅரசுக்கு உத்தரவிட வேண்டும்.

**கோரிக்கை 2.**

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம், பேரூராட்சியில் உள்ளதும், அருள்மிகு வஜ்ரேஸ்வரர் ஆலயம் சோழீஸ்வரர் ஆலயங்களுக்கு சொந்தமான நிலத்தில் தனிநபர்களால் கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு உரிய சொத்துவரி, குடிநீர் வரி மற்றும் இதர ரசீதுகள் ஆகியனவற்றை திருக்கோவில்கள் பெயரிலேயே விதிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களுக்கு உத்தரவிட வேண்டும். எனவே மேற்காணும் காரணங்களுக்காக எனது புகாரினை விசாரணைக்கு அனுமதிக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **14.11.2023** நாளிட்ட அறிவிப்பு மூலம் வல்லம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

மனுதாரரும் மற்றும் வல்லம் பேரூராட்சி செயல் அலுவலரும் **28.11.2023** அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 28.11.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரரும் செயல் அலுவலரும் விசாரணையில் ஆஜராகவில்லை. எனவே மீண்டும் 12.12.2023 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரரும் செயல்அலுவலரும் 20.12.2023 நடைபெறவுள்ள விசாணைக்கு நேரில் ஆஜராகும்படி அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**மனுதாரர் 20.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

" தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி, திருக்கானூர்ப்பட்டி கிராமம் சர்வே எண்.ங 49/1Aல் அமைந்துள்ள வஸ்ரேஸ்வரசுவாமி கோவில் இடத்தில் அமைந்துள்ள சுமார் 16 கடைகள் மற்றும் வீடுகளுக்கு, அங்கு குடியிருக்கும் வாடகைதாரர்/குத்தகைதாரர்களிடமிருந்து வல்லம் பேரூராட்சியால் சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. அச்சொத்து வரியின் கேட்பு (Demand Notice) மேற்கண்ட தனிநபர்களின் பெயரில் அளிக்கப்பட்டு , வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

திருக்கோவில்களுக்கு சொந்தமான இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு இந்த சமய அறநிலையத்துறையிடம் முறைப்படி அனுமதி பெற்று அவ்வாறு கட்டப்பட்ட கட்டடங்களுக்கு நிலத்தின் உரிமையாளர் அதாவது கோவிலின் பெயரிலேயே சொத்துவரி விதிக்க வேண்டுமே தவிர தனியர் பெயரில் சொத்து வரி விதிப்பதற்கு விதிகளில் வழிவகை இல்லை என தெரிவித்து பேரூராட்சிக்கு புகார்கள் அனுப்பப்பட்டு, அவற்றின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் கடைகளுக்கான சொத்து வரியை கோவில் பெயரிலேயே கேட்பு அனுப்பப்பட்டு, கோவிலிலிருந்தே பேரூராட்சியால் சொத்து வரி வசூலித்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எனது 16.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

வல்லம் பேரூராட்சியின் செயல் அலுவலர் 20.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தன்னுடைய வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்:

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள வல்லம் பேரூராட்சி புல எண்.49/1ல் உள்ள வஜ்ரேஸ்வரசுவாமி கோவிலின் காலிமனையை குத்தகைக்கு விடப்பட்டுள்ள கோவில் இடத்தில் (மொத்தம் 13) வணிகம் மற்றும் குடியிருப்புகள் இருந்து வந்த நிலையில், அவற்றில் 9 வணிகம் மற்றும் குடியிருப்புகளுக்கு கோவிலின் பெயரிலேயே சொத்து வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள குத்தகைதாரர்களிடம், அவர்களது பெயரில் சொத்து வரி கேட்பு அனுப்பப்பட்டு அவர்களிடம் சொத்து வரி வசூலிக்கப்பட்டு வந்தது. மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட புகார் மனுவையொட்டி மேற்கண்ட 4 தனிநபர் பெயர்களிலிருந்த சொத்து வரி மற்றும் குடிநீர் வரி 02.12.2023 அன்று வஜ்ரேஸ்வர சுவாமி டிரஸ்ட் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் அவற்றின் நகல்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

வல்லம் பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 18.12.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட திருக்கானூர்ப் பட்டி வருவாய் கிராமத்திற்குட்பட்ட புல எண் 49/1ல் உள்ள 0.26.0 ஹெ.ஏர்ஸ் பரப்பளவில் உள்ள புன்செய் நிலத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் கடைகளுக்கு வல்லம் பேரூராட்சியால் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் திருக்கோயில் பெயரில் விதிக்காமல் தனிநபர் பெயரில் விதிக்கப்பட்டுள்ளதை திருக்கோயில் பெயரில் மாற்றவும், எதிர்வருங்காலங்களில் தனிநபர் பெயரில் வரி விதிப்பு செய்யாமல் திருக்கோயில் பெயரிலேயே வரி விதிப்பு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க கீழ்க்கண்ட விவரப்படி வரி விதிப்புகள் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயிலுக்கு சொந்தமான புல எண். 49/1 ல் உள்ள 0.26.0 ஹெ.ஏர்ஸ் பரப்பளவில் உள்ள புன்செய் நிலத்தில் வஜ்ரேஸ்வரசுவாமி கோயில் டிரஸ்ட் நிர்வாகத்தால் காலிமனைகளாக குத்தகைக்கு பல்வேறு நபர்களுக்கு விடப்பட்டுள்ளது. மேலும் குத்தகை வழங்கும்போது வஜ்ரேஸ்வரசுவாமி கோயில் டிரஸ்டி மற்றும் குத்தகைதாரர்கள் செய்து கொண்ட ஒப்பந்தப்பத்திரத்தில் சொத்துவரி விதிப்பது, சொத்துவரி செலுத்துவது குறித்து ஏதும் குறிப்பிடப்படவில்லை. மேலும் மேற்படி வஜ்ரேஸ்வரசுவாமி கோயில் நிர்வாகத்தால் கட்டிடங்கள் ஏதும் கட்டப்படவில்லை. குத்தகைதார்களாலேயே கட்டிடங்கள் கட்டப்பட்டு சொத்துவரி செலுத்தப்பட்டு வந்தது. கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் கடைகளுக்கு சொத்துவரி விதிப்பு எண்கள் முறையே 4933, 355, 356, 357, 358, 359, 360, 361, 527, 528, 529, 1704, 1733 மற்றும் குடிநீர் இணைப்பு எண்கள் 138, 1293, 1432, 1463, 1681, 2538, 2949 ஆகியவை வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் 355, 356, 357, 359,360 மற்றும் குடிநீர் இணைப்பு எண்கள் 138, 1293, 1681, 2538, 2949 ஆகிய வரி விதிப்புகள் ஏற்கனவே வஜ்ரேஸ்வரசுவாமி கோயில் டிரஸ்ட் பெயரில் உள்ளது. ஏனைய சொத்து வரி விதிப்பு எண்கள் 4933, 358, 361, 527, 528, 529, 1704, 1733 மற்றும் குடிநீர் இணைப்பு எண்கள் 1432, 1463 ஆகிய வரி விதிப்புகள் தனிநபர் பெயரில் இருந்ததை தற்போது வஜ்ரேஸ்வரசுவாமி கோயில் டிரஸ்ட் பெயரிலேயே உத்தரவுப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி புல எண்ணில் உள்ள அனைத்து சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு வரியினங்களை வஜ்ரேஸ்வரசுவாமி கோயில் டிரஸ்ட் பெயரிலேயே செலுத்த விபரப்படியான கடிதம் தக்கார், அருள்மிகு சோழிஸ்வரன் (ம) வஜ்ரேஸ்வரர் திருக்கோயில், வல்லம் என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், வல்லம் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

" தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி, திருக்கானூர்ப்பட்டி கிராமம் சர்வே எண்.ந 49/1Aல் அமைந்துள்ள வஸ்ரேஸ்வரசுவாமி கோவில் இடத்தில் அமைந்துள்ள சுமார் 16 கடைகள் மற்றும் வீடுகளுக்கு, அங்கு குடியிருக்கும் வாடகைதாரர்/குத்தகைதாரர்களிடமிருந்து வல்லம் பேரூராட்சியால் சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. அச்சொத்து வரியின் கேட்பு அறிவிப்பு (Demand Notice) மேற்கண்ட தனிநபர்களின் பெயரில் அளிக்கப்பட்டு , வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. திருக்கோவில்களுக்கு சொந்தமான இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு இந்த சமய அறநிலையத்துறையிடம் முறைப்படி அனுமதி பெற்று அவ்வாறு கட்டப்பட்ட கட்டடங்களுக்கு நிலத்தின் உரிமையாளர் அதாவது கோவிலின் பெயரிலேயே சொத்துவரி விதிக்க வேண்டுமே தவிர தனியர் பெயரில் சொத்து வரி விதிப்பதற்கு விதிகளில் வழிவகை இல்லை என தெரிவித்து பேரூராட்சிக்கு புகார்கள் அனுப்பப்பட்டு, அவற்றின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் கடைகளுக்கான சொத்து வரியை கோவில் பெயரிலேயே கேட்பு அனுப்பப்பட்டு,

கோவிலிலிருந்தே பேரூராட்சியால் சொத்து வரி வசூலித்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

வல்லம் பேரூராட்சி புல எண்.49/1ல் உள்ள வஜ்ரேஸ்வரசுவாமி கோவிலின் காலிமனையை குத்தகைக்கு விடப்பட்டுள்ள கோவில் இடத்தில் (மொத்தம் 13) வணிகம் மற்றும் குடியிருப்புகள் இருந்தவந்த நிலையில், அவற்றில் 9 வணிகம் மற்றும் குடியிருப்புகளுக்கு கோவிலின் பெயரிலேயே சொத்து வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள குத்தகைதாரர்களிடம், அவர்களது பெயரில் சொத்து வரி கேட்பு அனுப்பப்பட்டு அவர்களிடம் சொத்து வரி வசூலிக்கப்பட்டு வந்தது. மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட புகார் மனுவைபொட்டி 4 தனிநபர் பெயர்களிலிருந்த சொத்து வரி மற்றும் குடிநீர் வரி 02.12.2023 அன்று வஜ்ரேஸ்வர சுவாமி டிரஸ்ட் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர் வாக்குமூலம் மற்றும் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்தபின்னர் தான் 4 தனிநபர் பெயர்களிலிருந்த சொத்துவரி மற்றும் குடிநீர் வரி அதாவது 02.12.2023 அன்று வஜ்ரேஸ்வரசுவாமி டிரஸ்ட் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய செயல் அலுவலரால் உத்தரவிடப்பட்டுள்ளது. இச்செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, விதி 255(1) (a)ன் கீழ் சொத்துதுரி விதிப்பு குறித்து கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

255 Levy of property tax – (1) The property tax shall be levied on all lands buildings storage structures and tele communication towers built on or attached to land within the Municipality as follows:

(a) In case of all lands buildings and storage structures the tax shall primarily be levied upon the owner thereof; and
(b) X x x x x x x x

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023 விதி 256ன் கீழ் சொத்து வரி விதிப்பதற்கான தாக்கல் செய்யும் முறை குறித்து விரிவான வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேற்படி விதிகளின்படி களப்பணியாளர்கள் தங்களது பணியினை சரியாக செய்திருந்தால் இதுபோன்ற வரிவிதிப்பு தொடர்பான புகார்களை தவிர்த்திருக்கலாம். எனவே இந்நிகழ்வுக்கு காரணமாக இருந்த சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், வல்லம் பேரூராட்சியில் இதுபோன்று வேறு எதுவும் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் உள்ள கட்டடத்திற்கு தனியர்கள் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டு இருந்தால் அவை கண்டறியப்பட்டு, அதனை முறையாக கோயில் பெயருக்கு

சொத்து வரி பெயர் மாற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வல்லம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

The E.O. is liable to be proceeded against for his dereliction of duties and failure in taking cognizance of the deviation in issuing Tax assessment in the name of the occupant instead of the Temple authorities. The Director of Town Panchayats is directed to frame charges against the EO and the other delinquents responsible for this offence.

2024–ஆம் ஆண்டு, ஜனவரி 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. K. முத்தமிழ்ச்செல்வன்,
2/35, படையாச்சித்தெரு,
வல்லம் அஞ்சல்.
தஞ்சாவூர் மாவட்டம் – 613 403.

2) செயல் அலுவலர்,
வல்லம் பேரூராட்சி ,
தஞ்சாவூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
எம்.ஆர்.சி நகர், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

மேலாளர்